



புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






ஞாயிறு ❖ ஏப்ரல். 30, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 205 ❖ ரூ.10


## பாஜகவுக்கு இந்த தேர்தலில் 40 இடங்களே கிடைக்கும் : ராகுல் காந்தி

# நம்பிக்கை

## இரட்டை இன்ஜின் ஆட்சி, கர்நாடகாவுக்கு ஏராளமான நன்மைகளை அளித்துள்ளது, இது தொடர வேண்டும்: பிரதமர் மோடி

ஹம்னாபாத் (கர்நாடகா), ஏப். 30:

**காங்கிரஸ்தலைவர்களின் கடும் விமர்சனங்களுக்கு வாக்குகள் மூலம் மக்கள் பதிலடி கொடுப்பார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அம்மாநிலத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். பிதார் மாவட்டத்தின் ஹம்னாபாத் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை விவரம்: "நாட்டின் வளர்ச்சிக்காகவும், கர்நாடகத்தின் வளர்ச்சிக்காகவும் பாஜக தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. மத்தியிலும், மாநிலத்திலும் பாஜக ஆட்சியில் இருப்பதால் கர்நாடகா வேகமாக வளர்ந்து வருகிறது. இரட்டை இன்ஜின் ஆட்சி, கர்நாடகாவுக்கு ஏராளமான நன்மைகளை அளித்துள்ளது. இது தொடர வேண்டும்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே என்னை 'விஷப் பாம்பு' என விமர்சித்துள்ளார். காங்கிரஸ் தலைவர்கள் என்னைக் கடுமையாக திட்டுவது இது முதல்முறை அல்ல. இதுவரை 91 முறை அவர்கள் என்னைக் கடுமையான வார்த்தைகளால் திட்டி இருக்கிறார்கள். என்னை திருடன் என்றார்கள்; தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தவன் என்றார்கள்; நான் சார்ந்த ஓபிசி சமூகத்தையே திருடன் என்றார்கள். அதுமட்டுமல்ல, கர்நாடகாவின் லிங்காயத் சமூகத்தையும் திருடர்கள் என விமர்சித்தார்கள்.

அவர்கள் என்னை மட்டும் விமர்சிக்கவில்லை. இந்திய அரசியல் சாசனத்தின் சிற்பியான அம்பேத்கரையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. மாபெரும் தலைவரான அவரை, ராட்சசன் என்றார்கள்; துரோகி என்றார்கள்; மோசடி பேர்வழி என்றார்கள். நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவரான வீர சாவர்க்கரை எவ்வாறு அவர்கள் பழித்து வருகிறார்கள் என்பதை தற்போதும் பார்க்கிறோம். நாட்டின்மாபெரும் தலைவர்கள் பலர், காங்கிரஸின் பழிச் சொல்லுக்கு ஆளாகி இருக்கிறார்கள். காங்கிரஸால் தாக்கப்பட்ட அத்தகைய மாபெரும் தலைவர்களின் வரிசையில் நானும் இருப்பதை எண்ணி பெருமைப்படுகிறேன். இதை வெகுமதியாகவே கருதுகிறேன். என்றார்.

காங்கிரஸ்தலைவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் கூறுவதை அவர்கள்காதுகொடுத்துக்கேட்க வேண்டும். எப்போதெல்லாம் நீங்கள் மற்றவர்களை கடுமையாக திட்டுகிறீர்களோ அப்போதெல்லாம் எழுந்திருக்க முடியாத அளவுக்கு மக்கள் உங்களை தண்டித்திருக்கிறார்கள். இந்த முறையும், நீங்கள் திட்டியதற்கான பதிலடியை மக்கள் வாக்குகள் மூலம் உங்களுக்கு தருவார்கள்.

மற்றவர்களை எப்படியெல்லாம் விமர்சிக்கலாம் என்பதற்கான வார்த்தைகளை அகராதியில் தேடித் தேடி காங்கிரஸ் தனது நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாக நல்லாட்சியை கொடுத்திருந்தால், அதன்மூலம் தனது தொண்டர்களை உற்சாகப்படுத்தி இருந்தால், அதற்கு தற்போதைய துயர நிலை ஏற்பட்டிருக்காது. நான் மக்களுக்காக தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறேன். காங்கிரஸ் என்னை தொடர்ந்து விமர்சித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் விமர்சனம், உங்களின் ஆசீர்வாதத்தால் தூசியாகிவிடுகிறது" என்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.



### 40 இடங்களே கிடைக்கும் ; ராகுல்

40 சதவீத ஊழலில் திளைத்த பாஜகவுக்கு இந்த தேர்தலில் 40 இடங்களே கிடைக்கும். காங்கிரஸுக்கு 150 இடங்கள் கிடைக்கும். காங்கிரஸ் ஆட்சி அமைவதை யாராலும் தடுக்க முடியாது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் அனைத்து மகளிரும் அரசு பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம். அனைத்து வீடுகளுக்கும் 200 யூனிட் இலவச மின்சாரம், இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ. 2 ஆயிரம் வழங்கப்படும். வறுமைகோட்டுக்கு கீழ் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும். வேலையில்லா பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் ரூ. 3 ஆயிரமும், டிப்ளமோ பெற்றவர்களுக்கு மாதம் ரூ.1500 இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.











# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# நுகர்பொருள் வாணிப கழகத்தை தனியார்மயம் ஆக்குவதை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும்

## ஏ.ஐடி.யு.சி மாநில பொதுச் செயலாளர் சந்திரகுமார் பேட்டி

சீர்காழி, ஏப். 30 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவில் தனியார் மண்டபத்தில் ஏ.ஐ.டி.யு.சி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக சுமை தூக்கும் தொழிலாளர் சங்கம் சார்பாக 37 ஆவது ஆண்டு பேரவை கூட்டம் மாநில துணை பொதுச்செயலாளர் ராஜ்மோகன் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் ஏஐடியுசி மாநில பொது செயலாளர் சந்திரகுமார் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்பொழுதுபேசிய அவர் மோடி ஆட்சிக்கு வந்தால் டிபிசி, கொள்முதல் நிலையம், ரேஷன் கடை உள்ளிட்டவை இருக்காது எனவும், வருகின்ற 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் மோடி ஆட்சியை தடுத்து நிறுத்த வேண்டுமென விமர்சித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த மாநில பொதுச் செயலாளர் சந்திரகுமார், ஒன்றிய அரசு கொள்முதல் நிலையங்கள் தேவையில்லையென முடிவெடுக்கும். அதை பாதுகாக்க வேண்டும். முன்னாள் முதலமைச்சர் கலைஞர் 1972 இல் தொடங்கப்பட்ட நுகர்பொருள் வாணிப கழகத்தை தனியார் மயம் ஆக்குவதை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும். நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில் 18 கோடி ரூபாய் விவசாயிகளிடமிருந்து வசூல்செய்துள்ளதாகவும், இந்த ஊழலுக்கு முதல் காரணம் உயர் அதிகாரிகள் என தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

# பேனா சின்னத்துக்கு எதிராக சட்டப்போராட்டம் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவிப்பு

சென்னை, ஏப்.30–

பேனா நினைவுச்சின்னம் மெரினா கடற்கரையில்அமைக்க சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதியை எதிர்த்து சட்டப்போராட்டம் நடத்தப்படும் என்று சீமான் அறித்துள்ளார்.



மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர் கருணாநிதி நினைவாக மெரினா கடற்கரையில் ரூ.81 கோடி செலவில் 134 அடி உயரத்துக்கு பிரம்மாண்ட பேனா நினைவுச்சின்னம்அமைக்க தமிழக அரசு திட்டமிட்டு உள்ளது. மெரினா கடற்கரையில் பேனா நினைவுசின்னம்அமைக்க மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் பல்வேறு நிபந்தனைகளுடன் அனுமதிகொடுத்துள்ளது. இதற்குசீமான்கடும்எதிர்ப்பு தெரிவித்ததுடன், பேனா சின்னத்திற்கு எதிராக சட்டப்போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவீட்டர் பதிவில் கூறும்போது கடலில் பேனா நினைவுச் சின்னம் அமைப்பதற்கு விதிகளுக்குப் புறம்பாக ஒன்றியநிபுணர்குழுவினர் அனுமதி அளித்திருப்பது மக்களாட்சி முறைக்கு எதிரான செயல். சூழலியலுக்கு எதிரான மாநில அரசின் இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசின் குழு விரைந்து அனுமதி அளித்துள்ளது அவர்களின் ஒருங்கிணைந்த மக்கள் விரோதப் போக்கினைக் காட்டுகிறது.

மக்கள்கருத்துக்கேட்புக் கூட்டம் முறையாக நடைபெறவில்லை என்பதனைக் எடுத்துக் கொள்ளாது அனுமதி வழங்கப்பட்டிருப்பது மக்களின் கருத்தினை ஒன்றிய, மாநில அரசுகள் துளியும் மதிப்பதில்லை என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. மக்கள் விரோத சூழலியல் விரோதஇத்திட்டத்தினை எதிர்த்து அடுத்ததாக நாம் தமிழர் கட்சி சட்டப் போராட்டம் முன்னெடுக்க உள்ளது என்று அறிவிக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## காணவில்லை

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, பணங்குடி வட்டம், கடியாபட்டி, பெ.சிவராமன் மகன் கருப்பையா கொடுத்த அறிவிப்பு 05.01.2023 அன்று அரிமழத்திலிருந்து புதுக்கோட்டை டவுன் பஸ்சில் செல்லும்பொழுது திருமயம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 379/1956 ஆவணமாக பதிவு செய்யப்பட்டது. பட்டா எண். 493, புல எண். 697-6A,6C என்ற பத்திரம் தொலைந்துவிட்டது. இதுநாள்வரை தேடிபார்த்தும் கிடைக்காததால் இது சம்மந்தமாக அரிமழம் காவல் நிலையத்தில் 24.04.2023 அன்று புகார் எண். CAK23073971 வழியாக புகார் அளிக்கப்பட்டது. இந்த பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியை தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு.

சி.கருப்பையா த/பெ. சிவராமன், 30, பெருமாள்கோவில் தெரு, அரிமழம் – 622201, புதுக்கோட்டை மாவட்டம்.
செல். 9894767254

### ரேஷனில் வாங்காத பொருட்களுக்கு பில்

# விற்பனையாளர்களுக்கு கூட்டுறவு பதிவாளர் எச்சரிக்கை

சென்னை, ஏப்.30–

ரேஷனில் வாங்காத பொருட்களுக்கு பில் போட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென விற்பனையாளர்களுக்கு கூட்டுறவு பதிவாளர் சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.



மத்திய மாநில அரசுகள் வழங்கும் உணவு பொருட்கள் மானிய விலையில் இந்த ரேஷன் கடைகள் வாயிலாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கோடிக்கணக்கான குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகிறார்கள். ஆனால் சில ரேஷன் கடைகளில் ஊழியர்கள் முறைகேட்டில் ஈடுபட்டு வருவதாக புகார்கள் எழுந்துள்ளன. நியாய விலைக்கடைகளில் பொருட்கள் வாங்காமலேயே வாங்கியதாக குடும்ப அட்டைதாரர்களுக்கு குறுஞ்செய்தி வந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த நிலையில், பொதுமக்கள் வாங்காத பொருட்களை வாங்கியதாக பில் போடப்பட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைஎடுக்கப்படும் என்று அனைத்து ரேஷன் கடைகளுக்கும் கூட்டுறவு சங்க பதிவாளர் சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.

# கல்லூரியில் வகுப்பறைகளுக்கு மின்விசிறி வழங்கும் விழா: வைகோ பங்கேற்பு

தென்காசி, ஏப்.30–

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் வகுப்பறைகளுக்கு மின்விசிறி வழங்கும் விழா நடைபெற்றது.



விழாவிற்கு பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மதிமுகபொதுச்செயலாளர் வைகோ வருகை தந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டுமனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் உள்ள அனைத்து வகுப்பிற்கும் மின்விசிறிகளை இலவசமாக வழங்கினார். மின்விசிறிகளை கல்லூரியின் முதல்வர் எஸ்.கண்ணன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் மதிமுக துணைப் பொதுச்செயலாளரும், தென்காசிமாவட்டமதிமுக மாவட்டசெயலாளருமான தி.மு. ராஜேந்திரன், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.சதன் திருமலை குமார், நகர அவைக்கழகத் தலைவர் விவேகானந்தன், நகரச் செயலாளர் சாகிர் உசேன் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த அரசியல்பிரமுகர்கள்கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# செலவு கணக்கு காட்டாத வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட 3 ஆண்டுகள் தடை: இந்திய தேர்தல் ஆணையம் அதிரடி

டெல்லி, ஏப்.30–

செலவு கணக்கு காட்டாதவேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட 3 ஆண்டுகள் தடை விதித்து இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.




நாடாளுமன்றம், சட்டசபை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி மற்றும் சுயேட்சை வேட்பாளர், மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி தேர்தல் செலவு கணக்கை இந்திய தேர்தல் கமிஷனிடம் தாக்கல்செய்ய வேண்டும். அதற்காக கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் தேர்தல் செலவுக்கணக்கைதாக்கல் செய்ய வேண்டும். அதை தாக்கல் செய்ய தவறும் வேட்பாளர்களுக்கு 3 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்படும்.

அந்த வகையில் 2021-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு தேர்தல் செலவு கணக்கை காட்டாத சில வேட்பாளர்களுக்கு தேர்தலில் போட்டியிட 3 ஆண்டுகள் தடை விதித்து தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, சட்டசபை தேர்தலில் சங்கரன்கோவில் தொகுதியில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்ய கட்சி வேட்பாளர் பிரபுவுக்கு 3 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதித்து உத்தரவிடப்பட்டது.

மேலும், சங்கரன்கோவில் தொகுதி சுயேச்சை வேட்பாளர் பாலமுருகேசன், அவிநாசி தொகுதி சுயேச்சை வேட்பாளர் சகுந்தலா, சைதாப்பேட்டை தொகுதி சுயேச்சை வேட்பாளர்கள் இளங்கோ, வெங்கடேஷ், விருகம்பாக்கம் தொகுதி அண்ணா திராவிட மக்கள் கழக வேட்பாளர் தினேஷ்குமார் ஆகியோருக்கும் 3 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

### கோடை விடுமுறையை முன்னிட்டு

# திருநள்ளாறு சனீஸ்வர பகவான் கோவிலில் குவிந்த ஏராளமான பக்தர்கள்



காரைக்கால், ஏப்.30–

பக்தர்கள் தீர்த்த குளத்தில் நீராடி, நீண்ட நேரம் காத்திருந்து சனி பகவானை சாமி தரிசனம் செய்தனர்.

காரைக்காலை அடுத்த திருநள்ளாறில் உலகப் புகழ்மிக்க சனீஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் சனிக்கிழமை தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், சனிப்பெயர்ச்சியின் போது லட்சக்கணக்கான பக்தர்களும் சாமி தரிசனம் செய்வார்கள். அந்த வகையில், நேற்று சனிக்கிழமை என்பதால், கோவிலில் கூட்டம் நிறைந்து கானப்பட்டது. மேலும், தொடர் விமுறை என்பதால், அதிகாலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் தீர்த்த குளத்தில் நீராடி, நீண்ட நேரம் காத்திருந்து சனி பகவானை சாமி தரிசனம் செய்தனர்.

# ஆலங்குடி அருகே கல்லாலங்குடியில் மாபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டி

ஆலங்குடி ஏப்.30–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேஉள்ளகல்லாலங்குடி முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு நடைபெற்றது, ஜல்லிக்கட்டில் 610 காளைகளும் 300 மாடுபிடி வீரர்களும் கலந்து கொண்டனர்,ஜல்லிக்கட்டு போட்டியை விலங்குகள் நல வாரிய உறுப்பினர்கள் மெட்டல், அயூப்கான், திருவரங்குளம் ஒன்றிய சேர்மன் வள்ளியம்மை ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர், வருவாய்கோட்டாட்சியர் முருகேசன் உறுதிமொழி வாசித்தார்.



புதுக்கோட்டை, சிவகங்கை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இருந்து காளைகள் கலந்து கொண்டன, ஜல்லிக்கட்டில் காளையை அடக்கிய வீரர்களுக்கும் கட்டுக்கடங்காத காளைகளின் உரிமையாளர்களுக்கும் கட்டில்,பீரோ,எவர்சில்வர் பாத்திரம் மற்றும் ரொக்க பரிசுகள் வழங்கப்பட்டது. ஜல்லிக்கட்டில் காயமடைந்த 23 வீரர்களுக்கு உடனடியாக அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது, மேலும் மேல்கிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். ஜல்லிக்கட்டு போட்டியில் காளை வாடிவாசலில் இருந்து வெளியேறி ஓடும் போது உயர்அழுத்த மின் கம்பத்தில் மோதியதால் அதில் கம்பிகள் உரசி தீப்பொறியாக கீழே பார்வையாளர்கள் மீது விழுந்தது, இதில் 15 போ காயமடைந்து ஆலங்குடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர், ஆலங்குடி போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகம்மை தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# தென்காசி வடக்கு, தெற்கு மாவட்ட மதிமுக நிர்வாகிகள் தேர்தலில் போட்டியின்றி தேர்வு

தென்காசி, ஏப்.30–

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ ஆணைப்படி, தலைமை மதிமுக செயலாளர் துரை. வைகோ வழிகாட்டுதலின்படி, தென்காசி வடக்கு, தெற்கு, மாவட்ட மதிமுக நிர்வாகிகளுக்கான தேர்தல் குத்துக்கல்வலசையில் உள்ள மாவட்ட மதிமுக அலுவலகமான வைகோ செயலகத்தில் மதிமுக துணை பொதுச்செயலாளர் தி.மு ராஜேந்திரன் தலைமையிலும், சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைக்குமார், வி.எஸ் சுப்பாராஜ்,பொருளாளர் ராமகிருஷ்ணன், இசக்கியப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



மதிமுக சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் அரசு அமல்ராஜ், தேர்தல் ஆணையராக பொறுப்பேற்று தேர்தலை நடத்தினார், இதில் நிர்வாகிகள் வேட்பு மனு தாக்கல் செய்து இருந்தார்கள், அனைவரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டதாக தேர்தல் ஆணையர் அறிவித்தார். அதன்படி தென்காசி வடக்கு மாவட்ட அவைத் தலைவராக செல்வசக்திவடிவேல், மாவட்ட செயலாளராக சுதா இல. பாலசுப்பிரமணியன், பொருளாளராக அலாவுதீன், துணை செயலாளர்களாக மாரியப்பன் தங்கராஜ் சுப்பிரமணியன், பொன். ஆனந்தராஜ், சக்தி கோமதி சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர்களாக வரகனூர் காளிராஜ், விவேகானந்தன் பொதுக்குழு உறுப்பினர்களாக இலத்தூர் முருகன், மாரிச்சாமி, சுப்புலாபுரம் மணி, நடுவை வேல்பாண்டியன், வெங்கடாசலபதி ஆகியோர் நிர்வாகி தேர்தலில் போட்டியின்றி தேர்வு செய்யப் பட்டனர்.

தெற்கு மாவட்ட நிர்வாகிகளாக அவைத் தலைவராக வெங்கடேஸ்வரன், மாவட்ட செயலாளராக ராம உதயசூரியன், பொருளாளராக வழக்கறிஞர் சுப்பையா, மாவட்ட துணைச் செயலாளர்களாக மருதச்சாமி, எஸ்.கே.டி. துரைமுருகன், மதியழகன், சரவண விஜயா, தலைமை செயற்குழு உறுப்பினராக வேதநாயகம், பொதுக்குழு உறுப்பினர்களாக நடராஜன், வழக்கறிஞர் தங்கம், ரெங்கசாமி, ஆகியோர்நிர்வாகி தேர்தலில் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப் பட்ட மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் மாநில துணை பொதுச் செயலாளர் தி.மு ராஜேந்திரனிடம் வாழ்த்து பெற்றனர், முடிவில் வெங்கடேஸ்வரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



அரியலூரில் நடைபெற்ற ஆறாவது நாள் புத்தக திருவிழாவில் சிறந்த தாய்மார்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் திருமாவளவன் வழங்கினார், அருகில் அரியலூர் மாவட்ட கலெக்டர் ரமண சரஸ்வதி உள்ளார்.



காரைக்கால் மாவட்டம், திருப்பட்டினம் புதுத்தெருவில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வரும் நிலையில் அப்பணியினை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் ஆய்வு செய்து சாலையின் உறுதித் தன்மை மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு சாலை அமைக்கப்படுகிறதா என்பதனையும் ஆய்வு செய்தார். பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர். ரூபாய் நாற்பது இலட்சம் செலவில் சென்ற மாதம் தொடங்கப்பட்ட இப்பணி விரைவில் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மாணவர்களுக்கான மேல்நிலைக் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி: காரைக்கால் ஆத்மாலயா பள்ளியில் நடைபெற்றது

காரைக்கால், ஏப். 30 –

காரைக்கால் மாவட்டம், கீழகாசாக்குடி ஆத்மாலயா சிபிஎஸ்சி மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கான மேல்நிலைக் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் பத்தாம் வகுப்பு படித்த மாணவர்கள் தொழில் சார்ந்த கல்வி மற்றும் உயர்கல்வி பெறுவது குறித்தும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் கலை, அறிவியல், மருத்துவம், தொழிற்கல்வி உள்ளிட்ட மேற்படிப்புகளுக்கு செல்ல வழிகாட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி பல்கலைக்கழக வணிகவியல் பேராசிரியர் முனைவர் அருள் முருகன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியதோடு, மாணவர்களின் சந்தேகங்களுக்கும் பதில் அளித்தார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை பள்ளி தலைவர் சங்கரநாராயணன், தாளாளர் சித்ராதேவி சங்கரநாராயணன், பள்ளி ஒருங்கிணைப்பாளர் மோனிஷ் இவர்களின் ஆலோசனைப்படி பள்ளி முதல்வர் சுகன்யா, துணை முதல்வர் மாதவன் மற்றும் இருபால் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் செய்திருந்தனர். இதில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று பயன் பெற்றனர்.



▶ இந்தியா, ஸ்ரீலங்கா இடையே அனைத்து வணிகங்களுக்கான வர்த்தக ஆலோசகராக மதுராந்தகம் பகுதியை சார்ந்த சென்னை தங்க வைர நகை வியாபாரிகள் சங்க தலைவர் ஜெயிந்த்லால் செல்லாணியை இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் நியமித்துள்ளதை அடுத்து மதுராந்தகம் அனைத்து வணிகர்கள் பொதுநல சங்கத்தின் நிர்வாகிகள் பிரபாகரன், அன்சர், அப்துல் சமத், பவித்ரா சீனிவாசன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் வயது முதிர்வு காலத்தில் நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வது குறித்து பயிற்சி

புதுக்கோட்டை , ஏப். 30 –

ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கு வயது முதிர்வு காலத்தில் ஏற்படும் நோய்களிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்து விழிப்புணர்வில் அரசு மருத்துவக்கல்லூரி பேராசிரியர் சரவணன் பயிற்சி அளித்தார்.

புதுக்கோட்டை மாவட்ட ஓய்வு பெற்ற அரசு அலுவலர் சங்கத்தின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் புதுக்கோட்டை சங்கீதா உணவகம்கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் மூத்த உறுப்பினர்களுக்கு பாராட்டும் மரியாதையும் அளிக்கப்பட்டது. இதில் புதுக்கோட்டை ஓய்வு பெற்ற அரசு அலுவலகர்களின் கிளை நிர்வாகிகள் தலைவர் கணேசன், செயலாளர் மோகன் மற்றும் நிர்வாகிகள் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் இருந்து கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்பு துறையின் துணை பேராசிரியர் மருத்துவர் சரவணன் கலந்து கொண்டு நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற தலைப்பில் முதுமையில் வரக்கூடிய தொற்று நோய்களான காச நோய், மஞ்சள் காமாலை, கொரோனா தொற்று, வயிற்றுப்போக்கு குறித்தும், தொற்றா நோய்களான சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், கேன்சர் மற்றும் எலும்பு தேய்மானம், மூட்டு வலி, கண்கோளாறுகள், பல் பாதிப்புகளையும் விளக்கி கூறினார்.

இவற்றிற்கான தீர்வுகளான காலைக் கடன்கள், தூய காற்று, தூய நீர், ஊட்டச்சத்து நிறைந்த சத்தான உணவு முறைகள், உடற்பயிற்சி, நல்ல உறக்கம் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் வாழ்வில் உயர ஒழுக்கமாக நடத்தல், கடமை உணர்வு தவறாமல் இருத்தல், நல்ல பழக்க வழக்கங்கள் கடைபிடித்தல் போன்ற வாழ்வின் நெறி முறைகளுக்கு திருக்குறள், மூதுரை, சங்க தமிழ் இலக்கியங்களில் இருந்து மேற்கோள்கள் காட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியின் கல்லூரி விழா கோலாகலம்

புதுக்கோட்டை , ஏப். 30–

புதுக்கோட்டை அடுத்த சத்தியமங்கலம் சுதர்சன் பொறியியல் கல்லூரியின் ஆண்டுவிழா மற்றும் கல்லூரி விழா 29 ஏப்ரல் 2023 அன்று பிரசாஷ்தி 2023 என்று நடைபெற்றது. மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை தலைவர் சித்ரா பாலதங்கவேலு துவக்க உரையாற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரியின் கடந்த ஓராண்டு நிகழ்வுகளை தொகுத்து கல்லூரி முதல்வர் ஸ்ரீனிவாசன் ஆண்டு விழா அறிக்கையாக வாசித்த போது மாணவ, மாணவியர்களின் சாதனைகளையும் கல்லூரியின் சாதனைகளையும் பட்டியலிட்டு மேற்கோள் காட்டினார் கல்லூரி மாத இதழ் சுதர்சன் க்ரானிகல்ஸ் இந்த ஆண்டு துவக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



இவ்விழாவிற்கு உளவியல் வாழ்க்கை திறன் பயிற்சியாளர் மற்றும் ஒன் லைஃப் ஒன் சான்ஸ் லைஃப் ஸ்கில் அகாடமி இன் தலைமை நிர்வாக அதிகாரி மாணவ ரத்னா கார்த்திக் வேலு சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு அவருடைய நெகிழ்வு மிக்க பேச்சாற்றலால் மாணவர்களின் மனதில் ஊக்கத்தையும் கல்வியின் முக்கியத்துவத்தையும் பெற்றோர்களின் அருமையையும் பற்றி பதிய வைத்தார். விழாவிற்கு சுதர்சன் கல்வி குழுமத்தின் தாளாளர் ஸ்ரீ.கே. விஜய்குமார் தலைமை தாங்கினார். ஆம்பிசாஃப்ட் டெக்னாலஜிஸின் தலைமை கற்றல் அதிகாரி சசிதரன் மாணவர்களிடம் கருத்துக் கேட்டார். பின்னர் கல்லூரியின் வெவ்வேறு போட்டிகளான விளையாட்டு போட்டி கலாச்சார நிகழ்ச்சிக்கான போட்டிகள், கல்விசார் சிறப்பு நிகழ்வுகளுக்கான பரிசுகளையும் சான்றிதழ்களையும் வெற்றி பெற்ற தகுதியுள்ள மாணவ, மாணவியர்களுக்கும் கல்லூரியின் தாளாளர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் வழங்கினர் பின்னர் கல்லூரியின் துணை முதல்வர் சுஜாதா நன்றி தெரிவித்தார்.

# கந்தர்வகோட்டையில் பன்னிரு திருமுறை திருவிழா மற்றும் நால்வர் பெருமக்கள் திரு வீதி உலா



கந்தர்வகோட்டை, ஏப்.30–

கந்தர்வகோட்டை அமராவதி அம்மன் உடனுறை ஆபசகாயேஸ்வரர் கோயிலில் திருவாசகம் முற்றோதல் முதலாம் ஆண்டு விழாவும் உலக மக்கள் நன்மைக்காகவும், சுற்று வட்டார கிராம மக்கள் நன்மைக்காகவும், விவசாயம் செழித்தோங்கவும், தொழில் வளம் பெருகிடவும், மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கிடவும், அனைத்து ஜிவ ராசியும் பசி நீங்கி, நோயின்றி எல்லா வளமும் பெற்றிட வேண்டும் என்ற உரிய நோக்கத்தில் கயிலாய வாத்தியம் முழங்க திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் உற்சவர் நால்வர் திரு மேனிகளோடு, பன்னிரு திருமுறைகளுடன் திருவீதி உலா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் சங்கு முழங்க கயிலாய வாத்தியம் இசைக்க ஆயிரக்கணக்கான அடியார்களுடன் ஊர்வலம் முக்கிய வீதிவழியாக நடைபெற்றது, ஊர்வலத்தில் வந்த அடியார்களுக்கு, பொது மக்களுக்கும் நீர்மோர், பாணக்கம், ரொட்டி, இனிப்புகள் கொடுத்து உற்சாகத்துடன் வரவேற்றார்கள். ஊர்வல பாதை பாதுகாப்பு பணியில் கந்தர்வகோட்டை காவல் துறையினர் ஈடுபட்டிருந்தனர், விழாவிற்கான ஏற்பாடுகளை சிவனடியார்கள் திருக்கூட்டமும் ,கிராம பொதுமக்களும் செய்திருந்தார்கள்.

## டாஸ்மாக் தானியங்கி இயந்திரம் குறித்து

# "இருப்பைக் காட்டவே உண்மைக்கு மாறாக இபிஎஸ் அறிக்கை" செந்தில் பாலாஜி காட்டம்

சென்னை , ஏப். 30 –

"எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தனது இருப்பை காட்டிக்கொள்ள, உண்மைக்கு மாறாக அறிக்கை வெளியிடுகிறார்" என்று டாஸ்மாக் தானியங்கி இயந்திரம் குறித்து அமைச்சர் செந்தில் பாலாஜி விமர்சித்துள்ளார்.



சென்னை, கோயம்பேட்டில் உள்ள தனியார் வணிக வளாகத்தில் தானியங்கி மது விற்பனை இயந்திரத்தை டாஸ்மாக் நிறுவனம் நிறுவி உள்ளது. இது தொடர்பாக விளக்கம் அளித்த டாஸ்மாக் நிறுவனம், "சில்லறை விற்பனைக் கடைகளில் விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை தடுக்கும் வகையில் நான்கு (Mall Shops) மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் மட்டுமே, கடைகளுக்கு உள்ளேயே தானியங்கி மதுபான விற்பனை இயந்திரம் (Automatic Vending Machine) நிறுவ நடவடிக்கையில் உள்ளது. இந்த தானியங்கி மதுபான விற்பனை இயந்திரம் மூலம் மதுபானங்கள் விற்பனை செய்யப்படும்போது அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவது தடுக்கப்படுகிறது.

தானியங்கி மதுபான விற்பனை இயந்திரம், வணிக வளாக சில்லறை விற்பனை கடைகளுக்கு (Mall Shops) உள்ளேயே நிறுவப்பட்டுள்ளது. மேலும் தானியங்கி மதுபான விற்பனை இயந்திரம் மூலம் செய்யப்படும் அனைத்து விற்பனைகளும் கடைப் பணியாளர்களாகிய மேற்பார்வையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் முன்னிலையிலேயே நடைபெறும் வகையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த தானியங்கி மதுபான விற்பனை இயந்திரம் மூலம் கடைப் பணியாளர்களின் முன்னிலையில் கடைகளின் உள்ளேயே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதால் 21 வயதிற்கு குறைவானவர்களுக்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்படமாட்டாது" என்று தெரிவித்திருந்தது.

இதன் தொடர்ச்சியாக, தானியங்கி இயந்திரத்திற்கு கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், 'இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள் என எல்லோரும் வந்து செல்லும் மால்களில் டாஸ்மாக் தானியங்கி இயந்திரம், மக்களுக்கு என்ன மாதிரியான எண்ணத்தை விதைக்கும் என்ற அடிப்படை யோசனைகூட தமிழக அரசுக்கு இல்லையா?" என்று கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்குபதில் அளித்துள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் "கோயம்பேட்டில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் மால் ஷாப்களில்தான் தானியங்கி எந்திரம் நிறுவப்பட்டிருக்கிறது என தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் தெளிவான குறிப்பை வெளியிட்ட பிறகும், 'உள்ளேன் அய்யா' என இருப்பை காட்டிக்கொள்ள, உண்மைக்கு மாறாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார் பழனிசாமி" என்று விமர்சித்துள்ளார்.

# ஆவுடையார்கோவில் அருகே குன்னூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கலை கட்டிய ஆண்டு விழா நிகழ்ச்சி

ஆவுடையார்கோவில், ஏப். 30–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுக்கா குன்னூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஆண்டு விழா நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு குன்னூர் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் ப.காளிமுத்து தலைமை வகித்தார். இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜ. ஜகுபர் வரவேற்புரையாற்றி அழைப்பார்களுக்கு பொன்னாடை போர்த்தி ஆண்டறிக்கை வாசித்தார். இவ்விழாவிற்கு அறந்தாங்கி கல்விமாவட்ட பள்ளி ஆய்வாளர் இளையராஜா மற்றும் ஆ.கோவில் பிஆர்சி மேற்பார்வையாளர் ஆ.செல்வராஜ், இல்லம் தேடிக் கல்வி மேற்பார்வையாளர் அ.செல்வராஜ், குன்னூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கரு. அண்ணாதுரை, தலைமை ஆசிரியர்கள் கண்ணையார், மு.காளிமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



ஊராட்சி மன்றத் தலைவர் ப. காளிமுத்து மற்றும் இல்லம் தேடி தன்னார்வளர் பெ. கலையரசி சுற்றுச் சூழலை பாதுகாக்கும் விதமாக மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கினார்கள், அறந்தாங்கி தாலீப் நகைக்கடை சார்பாக மாணவர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது, பிறகு மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சி சிறப்பாக நடைப்பெற்றது, நிறைவாக பள்ளியின் உதவி ஆசிரியர் ஆ.எட்வர்ட் ராஜா மான்சிங் நன்றி கூறினார், ஆண்டு விழா நிகழ்ச்சியில் பெற்றோர்கள், குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் கிராம மக்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.

# உளுந்தூர்பேட்டை வழக்கறிஞர்கள் சங்க புதிய நிர்வாகிகள்பதவியேற்பு



கள்ளக்குறிச்சி, ஏப்.30–

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வழக்கறிஞர்கள் சங்கத் தலைவராக மணிராஜ், செயலாளர் காமராஜ் பொருளாளர் ஆறுமுகம் மற்றும் துணை பொறுப்பாளர்கள் ஆகியோரின் பதிவி காலம் ஓராண்டு நிறைவு பெற்றதை தொடர்ந்து , 2023–2024–ம் ஆண்டிற்கான வழக்கறிஞர் சங்கத்தின் புதிய தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் துணை பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் உளுந்தூர்பேட்டை வழக்கறிஞர் சங்க அலுவலகத்தில் தேர்தல் பொறுப்பாளர்கள் முன்னிலையில் வேட்பு மனுதாக்கல் செய்யப்பட்டு தேர்தல நடைபெற்றது, இதில் புதிய சங்கத் தலைவராக வெங்கடேசன், செயலாளராக திலிப், பொருளாளராக ஏழுமலை மற்றும் துணைத் தலைவராக விஜய பார்த்திபன், துணைச் செயலாளராக செல்வக்குமார், நூல்களாக செந்தில்குமார் ஆகியோர் புதிய பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டு பதவி ஏற்று கொண்டனர் , இந்நிகழ்வின் போது உளுந்தூர்பேட்டை பகுதியை சேர்ந்த மூத்த மற்றும் இளம் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் மாணவர் சேர்க்கை பிரச்சார வாகனம் வட்டார கல்வி அலுவலர் தொடங்கி வைத்தார்

கந்தர்வகோட்டை, ஏப்.30–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் அரசுப்பள்ளியில் மாணவர் சேர்க்கை செய்தல் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனம் வடுகப்பட்டி மங்களா கோயில் ,புதுநகர். கந்தர்வகோட்டை தெற்கு பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் அரசுப்பள்ளியில் மாணவர்களை சேர்க்கை செய்வது குறித்து வாகன பிரச்சாரம் நடைபெற்றது. அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற மாணவர் சேர்க்கை பிரச்சார வாகனத்தை வட்டாரக் கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.



ஆடல், பாடல், விளையாட்டு செயல்பாடுகள் வாயிலாக பாடங்களை கற்றுக் கொள்ளும் எண்ணும் எழுத்தும் திட்டம், அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், அரசு பள்ளி மாணவர்களுக்கு தொழிற்கல்வியில் 7.5 சதவீத இட ஒதுக்கீடு, அரசு பள்ளி மாணவிகளின் உயர்கல்விக்கான புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, வாசிப்பு திறனை வளர்க்க தேன் சிட்டு எனும் சிற்றிதழும், நூலகத்திற்கென்று தனி நேரம், இதழ்களின் படைப்புகளில் இருந்து வினாடி, வினா போட்டிகள், திரைப்பட ரசனையும் விமர்சனப் பார்வையும் வளர்க்க பள்ளி தோறும் சிறார் திரைப்பட விழாக்கள், இலக்கிய ஆர்வத்தை வளர்க்க இலக்கிய மன்ற செயல்பாடுகள், அரசியல் சாசனம் வலியுறுத்தும் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் வானவில் மன்றம், ஆட்டக் கலைகள், இசை, நாடகம் ,நடனம், ஓவியம் உள்ளிட்ட அனைத்து கலைகளிலும் கலைத்திருவிழா என்னும் தலைப்பில் பள்ளி அளவில் தொடங்கி மாநில அளவில் குழந்தைகளை பங்குபெறச் செய்தல் விளையாட்டுப் போட்டிகள், சிறார் திரைப்பட விழா, இலக்கிய மன்றப் போட்டி, வினாடி வினா போட்டிகள் ஆகியவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வெளிநாடுகளுக்கு கல்வி சுற்றுலா, கொரனோ கற்றலை சரிசெய்ய இல்லம் தேடிக் கல்வித்திட்டம் , மாற்றுத்திறன் மாணவர்களுக்கு சிறப்பு கல்வி உள்ளிட்ட திட்டங்களை தமிழ்நாடு அரசு பள்ளிகளில் செயல்படுத்தி வருகிறது.

பெற்றோர்கள் அனைவரும் தங்களுடைய குழந்தைகளை அரசு பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று பேசினார், வட்டார வள மைய மேற்பார்வையாளர் பிரகாஷ் ஒருங்கிணைத்தார், ஆசிரியர் பயிற்றுநர் பாரதிதாசன் அனைவரையும் வரவேற்றார். ஆசிரியர் பயிற்சிற்றுநர் சுரேஷ்குமார் இல்லம் தேடி கல்வி ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் அக்கச்சிப்பட்டி பள்ளி மேலாண்மை குழுத் தலைவவி இலக்கியா, துணைத் தலைவி வேதநாயகி வார்டு உறுப்பினர் கலா ராணி, ஆசிரியர்கள் மணிமேகலை, செல்வி ஜாய், வெள்ளைச்சாமி, மற்றும் பெற்றோர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிறைவாக தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

# ஓணாங்குடியில் குழந்தைகள் பங்கேற்ற பாலசபா நிகழ்வு

ஓணாங்குடி,ஏப்.30–

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கிராம அறிவு மையம் மற்றும் ஓணாங்குடி ஊராட்சி இணைந்து நடத்திய பாலசபா நிகழ்வு ஓணாங்குடியில் நடைபெற்றது, நிகழ்விற்கு ஓணாங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஆர்.முருகேசன் தலைமை வகித்தார்.



தமிழ்நாடு அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சி துறை முதன்மை ஆலோசகர் ஆர்.சுஜாதா சிறப்புரையாற்றினார், அவர் பேசுகையில், புதுக்கோட்டையில் முதன் முதலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாலசபா நிகழ்வில் பங்கேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். பாலசபா நிகழ்வு என்பது குழந்தைகளை சமூகம் மற்றும் ஜனநாயகத்தில் பங்கேற்க செய்யும் முக்கிய நிகழ்வாகும், ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளில் முக்கிய அம்சமான குழந்தைகளை நல கிராமத்தை உருவாக்குதலுக்கு இந்த பால சபா நிகழ்வும் மிகவும் அடிப்படையான ஒன்றாகும்.

கிராமம் மற்றும் பள்ளிகள் சார்ந்த குழந்தைகளின் பிரத்தியோக தேவைகளை குழந்தைகளே எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக இந்த பாலசபா நிகழ்வு அமையும், மேலும் குழந்தைகள் பொது நிகழ்வுகளில் பங்கேற்கவும், பேச்சாற்றலை வளர்க்கவும் இந்த நிகழ்வு தூண்டுதலாக அமையும் என்றார். இந்த நிகழ்வு மாதம் ஒரு முறை நடத்தப்படும், குழந்தைகள் சொல்லும் தேவைகளை கிராம சபா கூட்டத்தில் விவாதித்து அதனை நிறைவேற்ற மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார். நிகழ்வை அரிமளம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மேகலா முத்து துவக்கிவைத்து உரையாற்றினார். அவர் பேசுகையில் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் தேவைகளை குழந்தைகளிடமிருந்து தெரிந்துகொள்ளும் வாய்ப்பை பாலசபா வழங்கியுள்ளது. குழந்தைகள் தெரிவித்துள்ள தேவைகளான நூலகம், நீட் உள்ளிட்ட பொது தேர்விற்கு தயார் செய்வதற்கான நூல்கள் மற்றும் குழந்தைகள் நூலகம் ஆகியவைகள் இங்கு செயல்படும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிராம அறிவு மையம் மூலம் விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்றார், மேலும் பிற தேவைகளை தொடர்புடைய துறைகளின் ஒத்துளைப்புடன் விரைவில் நிறைவேற்றப்படும் என்றார்.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் எம்.வீரமுத்து, ஓணாங்குடி பள்ளி தலைமையாசிரியர் க.விஜயலெட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஓணாங்குடியைச் சார்ந்த 6 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை படிக்கும் சுமார் 100 மாணவர்கள் நிகழ்வில் பங்கேற்றார்கள். அவர்கள் ஸ்மார்ட் வகுப்பறை, சுத்தமான குடிநீர், மேல்நிலைப்பள்ளி, கம்ப்யூட்டர் பயிற்சி, சத்துணவு கூடத்தில் உட்கார்ந்து சாப்பிடுவதற்கான இடம், உடற்பயிற்சி ஆசிரியர், குழந்தைகளுக்கான பூங்கா, சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதற்கான பயிற்சி, நீட் உள்ளிட்ட போட்டி தேர்வுகளுக்கு தயார் செய்வதற்கான புத்தகங்கள், குழந்தைகள் நூலகம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை தெளிவாக, எடுத்துரைத்தார்கள். நிகழ்வில் கிராம அறிவு மைய பணியாளர் வி.மேனகா, ஊராட்சி செயலர் ஆர்.ரெங்கநாதன் ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்தனர். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கள அலுவலர் டி.விமலா அனைவரையும் வரவேற்றார், ஆசிரியர் சு.காந்திமதி நன்றி கூறினார்.

### பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு.சின்னப்பா முதலாம் ஆண்டு நினைவு

# அறமனச்செம்மலும் அறுபது கவிஞர்களும் நிகழ்வு இன்று புதுக்கோட்டையில் நடைபெறுகின்றது










**புதுக்கோட்டை , ஏப். 30-**
**பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு.சின்னப்பா முதலாம் ஆண்டு நினைவு பல்கலைத் திறன் போட்டிகளின் 5ம் நாள் நிகழ்வாக அறமனச்செம்மலும் அறுபது கவிஞர்களும் நிகழ்வானது இன்று புதுக்கோட்டையில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.**

புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனர் அறமனச்செம்மல் சீனு. சின்னப்பா அவர்களுடைய முதலாம் ஆண்டு நினைவு தினத்தை அனுசரிக்கும் விதமாக பல்கலைத் திறன் போட்டிகள், யோகாசனப் போட்டி, இரத்ததான முகாம், சிலம்பம், கராத்தே போட்டிகள், கவியரங்கம், பரிசளிப்பு விழா என ஐந்து நாள் நிகழ்வின் துவக்க விழா சின்னப்பா நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் கடந்த ஏப்ரல் 26ம் தேதி புதன்கிழமை முதல் துவங்கி நடைபெற்று வருகிறது.

முதல்நாள் நிகழ்வை திருக்குறள் கழகத்தின் தலைவர் க.இராமையா துவங்கி வைத்தார், மாவட்ட வர்த்தக கழகத்தின் தலைவர் சாகுல்ஹமீது, செயலாளர் சாந்தம் சவரிமுத்து, பொருளாளர் கதிரேசன், கிங் டவுன் ரோட்டரி சங்க தலைவர் விக்னேஷ், செயலாளர் ஆனந்த் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் தொல்பொருள் ஆய்வு கழகத்தின் நிறுவனர் ஆ.மணிகண்டன், சத்தியராம் இராமுக் கண்ணு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புவனேஸ்வரி பாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

அபாகஸ், தமிழ், ஆங்கிலம் கையெழுத்துப் போட்டி, ஓவியம் என பல்கலைத்திறன் போட்டிகள் நடைபெற்றது 750க்கும் மேற்பட்ட பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் பெற்றோர்களோடு கலந்துகொண்டனர்.

**ஏப்ரல்-27 வியாழன்; யோகாசனப் போட்டி**

போட்டியினை எஸ்.வி.எஸ் ஹீரோ வின் நிர்வாக இயக்குனர் எஸ்.வி.எஸ். ஜெயகுமார் துவங்கி வைத்தார், ரோட்டரி மாவட்டம் 3000-தின் முன்னாள் துணை ஆளுநர்கள் கருணாகரன், பிரசாத், பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அரசு சிறப்பு வழக்கறிஞர் செந்தில்குமார் சிறப்புரையாற்றினார் மதியம் நடைபெற்ற கவிதைப் போட்டியினை மாமன்னர் கல்லூரியின் பொருளாதார துறை பேராசிரியர் கருப்பையா துவங்கிவைத்தார். நடுவர்களாக கவிஞர் மா.கண்ணதாசன், தமிழ் ஆசிரியர்கள் உதயகுமார் ஆனந்தி ஆகியோர் கலந்துகொண்டனர். ஆத்மா யோகா மையத்தின் நிறுவனர் யோகா ரெ.பாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

யோகா மற்றும் கவிதைப் போட்டிகள் LKG, UKG, ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை, 4-ம் வகுப்பு முதல் 6-ஆம் வகுப்பு வரை, 7-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை 10 - முதல் 12-ம் வகுப்பு என 5- பிரிவாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக நடைபெற்றது. 350க்கும் மேற்பட்ட பள்ளி கல்லூரி யோகா மற்றும் கவிதை ஒப்புவித்த மாணவ மாணவிகள் பெற்றோர்களோடு கலந்துகொண்டனர்.

**ஏப்ரல்-28 வெள்ளி; இரத்ததான முகாம்**

மூன்றாம் நாள் நிகழ்வாக மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது. குருதிக் கூடு, ஜேசிஐ புதுக்கோட்டை சென்ட்ரல், ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி , ஆத்மா அகாடமி இணைந்து நடத்திய இம்முகாமினை புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையின் மேனாள் தலைமை மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர் எட்வின், குழந்தைகள் நல மருத்துவர் ச.ராமதாஸ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இரத்த வங்கி மருத்துவ அதிகாரி மருத்துவர் கிஷோர்குமார் தலைமையில் இரத்த வங்கி மருந்துவர்கள், செவிலியர்கள் கலந்துகொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக வாசகர் பேரவை செயலாளர் பேராசிரியர் சா.விஸ்வநாதன், நகர்மன்ற உறுப்பினர் சா.மூர்த்தி, மரம் நண்பர்கள் செயலாளர் பழ.கண்ணன்,ஜேசிஐ முன்னாள் மண்டலச் செயலாளர் இராம. லெட்சுமணன், ஆறுமுகம், குருதிக் கூடு இரத்த தான அமைப்பின் நிறுவனர்கள் சுப. முத்துப்பழம்பதி, உடற்கல்வி ஆசிரியர் முத்துராமலிங்கம், ஜேசிஐ புதுக்கோட்டை சென்ட்ரல் தலைவர் கஜேந்திரன், செயலாளர் ரமேஷ், நேரு யுவகேந்திரா உதவி திட்ட அலுவளர் இரா.நமச்சிவாயம், மாவட்ட குழந்தைகள் நலக் குழுமத்தின் தலைவர் சதாசிவம், கருணாகரன், முருகபாரதி, ஆத்மா அகாடமி நிறுவனர் யோகா ரெ.பாண்டியன், செயலாளர் புவனேஸ்வரி பாண்டியன், ஸ்ரீவெங்கடேஸ்வரா பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பேக்கரி மஹராஜ் பணியாளர்கள் மற்றும் இரத்த கொடையாளர்கள் நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தார்கள்.

**ஏப்ரல்-29 சனி; கராத்தே & சிலம்பம் போட்டிகள்**

தலைமை விருந்தினராக ரோட்டரி மாவட்டம் - 3000தின் மேனாள் ஆளுநர் அ.லெ. சொக்கலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக அண்ணா பல்கலைக்கழக திருச்சி வளாகத்தின் உடல்கல்வி துறை தலைவர் ரமேஷ், சாலை பாதுகாப்பு, விழிப்புணர்வு சங்கத்தின் தலைவர் மாருதி கண.மோகன்ராஜ், புதுக்கோட்டை மாவட்ட பார்கவுன்சில் பொருளாளர் சுரேஷ்குமா, கவிஞர் பீர்முகமது, புத்தாஸ் பெற்றோர் பயிற்சியாளர் கழக தலைவர் அஸ்வின்குமார் ஆகியோர் துவக்கிவைத்தனர். சமூக சேவகர் காடுவெட்டியார் குமார், மருந்துவர் சிவபிரகாஷ் ஆகியோர் சிறப்ப விருந்தினர்களாக கலந்துகொண்டனர். புத்தாஸ் வீரக்கலை கழகத்தின் நிறுவனர் சேது. கார்த்திகேயன், மாஸ்டர் சண்முகம், ஆத்மா அகாடமி நிறுவனர் யோகா ரெ.பாண்டியன், செயலாளர் புவனேஸ்வரி பாண்டியன், ஸ்ரீவெங்கடேஸ்வரா பள்ளி ஆசிரியர்கள், நடுவர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட 320 மாணவ மாணவிகளும் கலந்துகொண்டனர்.

**ஏப்ரல்-30 இன்று ; அறமனச்செம்மலும் அறுபது கவிஞர்களும்**

அள்ளிக் கொடுத்து வாழ்ந்த நெஞ்சம். ஆனந்தப் பூந்தோப்பாய் மலர்ந்த நெஞ்சம் அறமனச் செம்மல் 'சீனு. சின்னப்பா அவர்கள் பெருங்கொண்டான் விடுதி தோப்பில் பேரமைதியில் துயில் கொண்டு ஓராண்டு நிறைவடைகிறது. முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தொடர்ந்து நான்கு நாட்கள் ஆத்மா யோகா நிறுவனர்கள் யோகா ரெ. பாண்டியன், யோகா புவனேஸ்வரி பாண்டியன் ஒருங்கிணைப்பில் பல்கலைத்திறன் போட்டிகள் நடைபெற்றன. ரத்ததான முகாமும் நடைபெற்றது. போட்டிகளின் நிறைவு நாள் 30.04.2023 அன்று பரிசளிப்பு நிகழ்வும் மாபெரும் கவியரங்கமும் நடைபெற உள்ளது. புதுக்கோட்டை சத்தியமூர்த்தி நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் 'அறமனச்செம்மலும் 60 கவிஞர்களும்' எனும் தலைப்பில் 60 கவிஞர்களின் கவிதை அணிவகுப்பு நடைபெற உள்ளது. கவிஞர்கள் 'சிந்தை நிறைந்த சீனு சின்னப்பா' என்ற தலைப்பிலோ அல்லது உழைப்பாளர் தினத்தைக் குறிக்கும் வகையில் 'அனுதினமும் மே தினமே' எனும் தலைப்பிலோ கவிதை படைப்பார்கள். காலை 10 மணிக்குத் தொடங்கி 12 மணிக்கு நிறைவடையும்.

கவிஞர்களின் சங்கமம் நடைபெறுகிற மஹராஜ் மகாலுக்கு தாங்களும் வருகை தந்து விழாவினை சிறப்பித்து 'அறமனச் செம்மல்' சீனு. சின்னப்பா அவர்களுக்கு அஞ்சலி செலுத்த கேட்டுக்கொள்கிறோம். என விழாக் குழுவின் சார்பாக கவிஞர் தங்கமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். கவிஞர்கள் சங்கமத்தை கவிச்சுடர் கவிதை பித்தன், கவிஞர் நா. முத்து நிலவன் ஆகியோர் தொடங்கி வைக்கிறார்கள். வழக்கம்போல் இன்றைய நிகழ்விலும் அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மன்னர் ஆண்ட மகத்துவம் நிறைந்த புதுக்கோட்டை மண்ணில் இதுவரையில் இவ்வளவு பெரிய ஒரு விழாவை எந்த மாமனிதருக்கும் ஐந்து நாள் பொது நிகழ்வு நடத்தி ஆயிரக்கணக்கானோரை பங்கேற்க வைத்து அவர்களுக்கு அவர்களின் திறமைக்கு ஏற்ற போட்டிகளை நடத்தி அதில் இருந்து சுமார் 500 வெற்றியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டிய நிகழ்வு புதுக்கோட்டை மண்ணில் இதுவே முதல் நிகழ்வு ஆகும்.

**மே-01 நாளை; உழைத்தவரின் தினம்**

உழைப்பாளர் தினத்தை உழைத்தவரின் தினமாக்கிய அறமனச் செம்மலுக்கு அவரது நினைவிடத்தில் நாளை மே 1ஆம் தேதி திங்கள்கிழமை. சமாதி வழிபாடு, நினைவேந்தல், புகழ் அஞ்சலி, ஜோதி வழிபாடு நிகழ்வானது காலை 7 மணியிலிருந்து நடைபெற இருக்கின்றது. இயற்கையை நேசித்து இயற்கையாகவே வாழ்ந்து மறைந்த சின்னப்பா அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கி பசுமைக்கு அஸ்திவாரம் போடும் மகத்தான பணியும் நடைபெற இருக்கின்றது.

---

### அறந்தாங்கி நகர்மன்ற கூட்டத்தில் காரசாரமான விவாதத்துடன்

## திமுக உறுப்பினர்கள் மோதல் 11வது வார்டு உறுப்பினர் கூட்டத்தை புறக்கணித்து வெளிநடப்பு செய்ததால் பரபரப்பு



அறந்தாங்கி, ஏப்.30-
புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி நகராட்சியில் மாதாந்திர நகர்மன்ற கூட்டம் நேற்று நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. நகர்மன்றத் தலைவர் ஆனந்த் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 27 வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில் ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்கள் பகுதியில் உள்ள தேவைகளை தெரிவிப்பதற்கு தனித்தனியே நேரம் ஒதுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது

பின்னர் 11-வது வார்டு உறுப்பினர் காசிநாதன் பேசுகையில் நகராட்சி பகுதிகளில் மத்திய அரசின் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதால் எந்த வார்டுக்கும் சாலை பணிகளுக்கான நிதி தற்போது ஒதுக்கப்படாது என்று தெரிவித்த நிலையில் 2-வது வார்டு மற்றும் 3 வது வார்டு உறுப்பினர்களுக்கு மட்டும் 30 லட்சம் மதிப்பீட்டில் தற்போது சாலை பணிகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ஏன் என்று கேள்வி எழுப்பினார். மற்ற உறுப்பினர்களுக்கு தகவல் ஏன் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை வருங்காலங்களில் இது போன்று நடக்காமல் இருக்க தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்

அப்போது வார்டு உறுப்பினர் காசிநாதனை எதிர்த்துப் பேசிய இரண்டாவது வார்டு திமுக உறுப்பினர் துளசிராமன் என்னுடைய வார்டு பகுதியை குறிப்பிட்டு நீங்கள் பேசக்கூடாது என்று கூறினார், பின்னர் காசிநாதனுக்கு பேச அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் ஆத்திரமடைந்த 11-வது வார்டு கவுன்சிலர் காசிநாதன் எனக்கு இந்த அவையில் எந்த உரிமையும் இல்லை அவ்வாறு இல்லாததால் கூட்டத்தை புறக்கணிப்பு செய்கிறேன் என்று காரசாரமான விவாதத்துடன் வெளியேறி சென்றதால், அவையில் பரபரப்பு ஏற்பட்டது

திமுக ஆளுங்கட்சியாக இருக்கும் பட்சத்தில் அறந்தாங்கி நகர்மன்ற குழுக் கூட்டத்தில் திமுக உறுப்பினர்களே நேருக்கு நேர் காரசாரமான விவாதத்துடன் மோதிக்கொண்டதால், அதிமுக மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

---

## இந்திய ஒன்றியத்திலேயே அதிக நீதிமன்றங்களை திறக்க வேண்டுமென்ற முனைப்புடன் சென்னை உயர் நீதிமன்றம் செயல்படுகிறது அமைச்சர் ரகுபதி பேச்சு




*சென்னை, ஏப். 30-*
*சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் 5 கூடுதல் நீதிமன்றங்களை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா நேற்று திறந்து வைத்தார்.*

*சென்னை எழும்பூர் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காசோலை மோசடி வழக்குகளுக்கான இரண்டு கூடுதல் நீதிமன்றங்கள், சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் துறை வழக்குகளுக்கான ஒரு கூடுதல் நீதிமன்றம், சிறிய வழக்குகளுக்காக மெய்நிகர் முறையிலான ஒரு நடமாடும் நீதிமன்றம், ரயில்வே சட்ட வழக்குகளுக்கான ஒரு நடமாடும் நீதிமன்றம் என 5 கூடுதல் நீதிமன்றங்களை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா நேற்று திறந்து வைத்தார்.*

*இந்த விழாவில் பேசிய அமைச்சர் ரகுபதி, "இந்திய ஒன்றியத்திலேயே அதிக நீதிமன்றங்களை திறக்க வேண்டுமென்ற முனைப்புடன் சென்னை உயர் நீதிமன்றம் செயல்படுகிறது. குற்றங்கள் அதிகரித்ததால்தான் அதிக நீதிமன்றங்கள் துவங்குவதாக எண்ண வேண்டாம். மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் காரணமாகவே கூடுதல் நீதிமன்றங்கள் துவங்கப்படுகின்றன. ரூ.1,747 கோடி நீதித்துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த ஆண்டைவிட இது 285 கோடி ரூபாய் அதிகம். சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்க நீதித்துறை கோரிக்கைகளை நிறைவேற்றும்படி முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்" என்று அவர் பேசினார்.*

*உயர் நீதிமன்ற நீதிபதி பரத சக்ரவர்த்தி பேசியபோது, "நாட்டிலேயே தமிழ்நாடு உள்பட மூன்று மாநிலங்களில் மட்டும் நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கையை விட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை குறைவு. அதற்கு குற்றவியல் வழக்குகளை விசாரிக்க நீதிமன்றங்கள் முக்கிய காரணம்" என்று தெரிவித்தார். இதைத்தொடர்ந்து உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகதீஷ் சந்திரா பேசும்போது, "எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் முன்பிருந்த சூழ்நிலையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தெரிவித்தார்.*

*பின்னர் பேசிய, உயர் நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, "கூடுதல் நீதிமன்றங்களை உருவாக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்படும் போதெல்லாம், தமிழக அரசு மனப்பூர்வமாக ஏற்று உரிய வசதிகளை செய்து கொடுக்கிறது. வழக்குகள் அதிகரிக்க மக்கள் தொகை பெருக்கம் மட்டும் காரணம் அல்ல. பிரச்சினைகளும் புதிது புதிதாக உருவாவதுதான். மக்கள் மத்தியில் தார்மீக விழுமியங்கள் குறைந்ததே வழக்குகள் அதிகரிக்க காரணம்" என்று தெரிவித்தார்.*

*பின்னர் சிறப்புரை ஆற்றிய பொறுப்புத் தலைமை நீதிபதி டி.ராஜா, "மெய்நிகர் நடமாடும் நீதிமன்றம் மூலம் வழக்குகளில் ஆஜராக நீதிமன்றம் வர தேவையில்லை. அனைவருக்கும் பிரச்சினைகள் இருப்பதால் அவற்றை தீர்க்கவே நீதிமன்றங்களை துவங்க வேண்டியுள்ளது. புரட்சிகளில் இருந்துதான் அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் பெற்றுள்ளோம். தகவல் தொழில்நுட்ப துறையின் புரட்சிதான் காகிதமில்லா நீதி பரிபாலனத்துக்கு கொண்டு வந்துள்ளது. மின்னணு மனு தாக்கல் நடைமுறையில் தொடங்கி காணொலியில் வழக்குகளை விசாரிக்கும் நடைமுறை வரை தொழில்நுட்பமே காரணம். இளம் வழக்கறிஞர்கள் வாதங்களை சுருக்கமாகவும், விரைவாகவும் முன்வைக்க வேண்டும்" என்று அவர் அறிவுறுத்தி பேசினார்.*

*இந்த நிகழ்ச்சியில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் கிருஷ்ணன் ராமசாமி, ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா, டி.பரத சக்ரவர்த்தி, மாவட்ட முதன்மை எஸ்.அல்லி, தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சியர் அமிர்தஜோதி, சென்னை காவல் ஆணையர் சங்கர் ஜிவால், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், எழும்பூர் வழக்கறிஞர் சங்க தலைவர் சந்தன்பாபு, செயலாளர் துரைக்கண்ணு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# மயிலாடுதுறையில் வேலைவாய்ப்பு முகாம்: மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி பணி நியமன ஆணை வழங்கினர்



மயிலாடுதுறை, ஏப். 30 –

மயிலாடுதுறை தியாகி ஜி.நாராயணசாமி மேல்நிலைப் பள்ளியில் மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு தொழில் நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் வேலை நாடுநர்கள் கலந்து கொண்டு முன்னணி நிறுவனங்களில் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணையை வழங்கி மாவட்ட ஆட்சியர் பேசியதாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சீரிய முயற்சியால் தமிழகம் முழுவதும் தனியார் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இது போன்ற வேலைவாய்ப்பு முகாம்களை இளைஞர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். அதேபோல மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள்மூலம்தமிழ்நாடு அரசு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட உதவி ஆய்வாளர் தேர்வில் முதல் நிலை மற்றும் உடல் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்று நேர்முகத் தேர்வுக்காக தயாராகி வந்த மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களுக்கு மாதிரி நேர்முகத் தேர்வு மயிலாடுதுறை மாவட்ட காவல் துறையுடன் இணைந்து நடத்தப்பட்டதில் மூன்று மாணவர்கள் உதவி ஆய்வாளராக பணியில் சேர்ந்து தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

மேலும் கடந்த 21.5.2022 அன்று நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி. குருப் 2/2 A முதல் நிலை தேர்வில் இம்மையத்தால் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகள் மற்றும் மாதிரி தேர்வுகள் வாயிலாக 48 இளைஞர்கள் கடந்த 24.2.2023 அன்று நடைபெற்ற முதன்மை தேர்வு எழுதி உள்ளனர்.

கடந்த மாதம் வெளியான TNUSRB போலீஸ் கான்ஸ்டபிள் இறுதி முடிவில் இம்மையத்தின் ஆறு மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாமில் 570 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பணி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஹெச்.சி.எல் நிறுவனத்தின் வாயிலாக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு பணிகள் வழங்கப்படுகிறது. உங்களுடைய எதிர்காலத்தை நீங்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். வேலை வாய்ப்பு முகாமில் 809 வேலை நாடுநர்கள் வருகை தந்துள்ளார்கள். 63 முன்னணி நிறுவனங்கள் வருகை தந்துள்ளன. இம்முகாமில் 158 நபர்களுக்கு வேலை வாய்ப்பு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சியர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், ஊரக வளர்ச்சித் துறை இணை இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ.யுரேகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பழனிவேலு, மயிலாடுதுறை ஒன்றிய குழுத்தலைவர் காமாட்சி மூர்த்தி, கொள்ளிடம் ஒன்றிய குழுத் தலைவர் ஜெயபிரகாஷ், மயிலாடுதுறை நகர்மன்றத் தலைவர் செல்வராஜ், குத்தாலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மங்கை சங்கர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# நெடுவாசல் சீதளாதேவி மாரியம்மன் கோயில் தீமிதி உற்சவம்



தரங்கம்பாடி, ஏப். 30 –

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா பொறையார் அருகே நெடுவாசல் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மன் கோயில் தீமிதி உற்சவம். நடைபெற்றது.

நெடுவாசல் சீதளாதேவி மாரியம்மன் கோயில் 20 –ஆம் ஆண்டு தீமிதி திருவிழாவை முன்னிட்டு கடந்த 14 ஆம் தேதி வெள்ளிக்கிழமை சீதளா தேவி மாரியம்மனுக்கு காப்பு அணிவித்தல் நிகிழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 15 ஆம் நாள் நேற்று கடலி ஆற்றின் கரையில் இருந்து கரகம், பால் காவடி, அலகு காவடிகள் புறப்பட்டு, வாணவேடிக்கை, மேளதாளம் முழங்க முக்கிய வீதி வழியாக கோயிலை வந்தடைந்தது.

இரவு 6 மணி அளவில் கோவில் முன்பு தீமிதி உற்சவம் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தீ மிதித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். தொடர்ந்து, சீதளாதேவி மாரியம்மனுக்கு பால், இளநீர், பன்னீர், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பல்வேறு வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

இதற்கான விழா ஏற்பாடுகளை நெடுவாசல், கொங்கராயன் மண்டபம், பட்டாவரம் கிராமவாசிகள் செய்திருந்தனர். திருவிழாவை முன்னிட்டு பொறையார் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# இந்திய வரலாற்றில் முதன்முறையாக எல்லையில் பெண் ராணுவ அதிகாரிகள் சென்னை ஓடிஏ–வில் பயிற்சி நிறைவு



சென்னை , ஏப். 30 –

இந்திய வரலாற்றில் முதன்முறையாக எல்லைப் பகுதியில் பணியாற்றப் போகும் பெண் ராணுவ அதிகாரிகள், சென்னை பரங்கிமலை ராணுவ அதிகாரிகள் மையத்தில் பயிற்சி முடித்து லெப்டினன்டாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

சென்னை பரங்கிமலையில் ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் உள்ளது. முப்படைகளிலும் பணியில் சேரும் அதிகாரிகளுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அத்துடன், நட்பு நாடுகளை சேர்ந்த ராணுவ அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாட்டிலேயே இங்கு மட்டும்தான் பெண் ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.


இதன்படி, பயிற்சி பெற்ற அதிகாரிகள் நிறைவு அணிவகுப்பு நேற்று நடைபெற்றது. 11 மாத பயிற்சியினை நிறைவு செய்த 186 அதிகாரிகள் லெப்டினன்டாக பதவி ஏற்றுக் கொண்டனர்.

இந்தியாவை சேர்ந்த 121 ஆண் அதிகாரிகள், 36 பெண் அதிகாரிகள், நட்பு நாடுகளைச் சேர்ந்த 5 ஆண் அதிகாரிகள் மற்றும் 24 பெண் அதிகாரிகளின் பயிற்சியை நிறைவு செய்தனர். இந்த நிகழ்ச்சியில் வங்கதேச ராணுவத்தின் தலைமை தளபதி ஷஃப்யூதின் அமீது சிறப்பு விருந்தினராக பங்கேற்று புதிதாக பதவி ஏற்ற அதிகாரிகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

குறிப்பாக, இந்த ஆண்டு முதன்முறையாக 5 பெண் ராணுவ அதிகாரிகள், இந்திய எல்லைப் பகுதிகளில் பணியாற்ற உள்ளனர். இவர்கள் அனைவரும் Regiment of Artillery பிரிவில் பணியாற்ற உள்ளனர். இதுவரை பெண்கள் இந்திய எல்லைப் பகுதியில் பணியாற்றியது இல்லை. முதல் முறையாக இந்த 5 பேர் ராணுவத்தின் பல்வேறு துறைகளின் கீழ பணியாற்ற உள்ளனர்.

சிறப்பாக பயிற்சியை முடிந்த அஜய் சிங் கில் என்ற அதிகாரிக்கு தங்கப் பதக்கமும், அஜய்குமார் என்ற அதிகாரிக்கு வெள்ளிப் பதக்கமும், மெஹக் ஷைனி என்ற அதிகாரிக்கு வெண்கலப் பதக்கம் வழங்கப்பட்டது.

# வன்னியர்களுக்கு 10.5 % இட ஒதுக்கிடு சட்டத்தை நிறைவேற்ற கோரி அரியலூரில் இருந்து தமிழக முதல்வருக்கு பாமக தலைவர் கடிதம்



அரியலூர்,ஏப்.30–

வன்னியர்களுக்கு 10.5% உள் இட ஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி, அரியலூரில் இருந்து தமிழக முதல்வருக்கு, பாமக சட்டமன்றத் தலைவர் ஜி.கே. மணி தலைமையில், கடிதம் அனுப்பும் நிகழ்வு நடைபெற்றது, அரியலூர் தலைமை தபால் நிலையத்திலிருந்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் ஜி.கே. மணி தலைமையில், கட்சி நிர்வாகிகள் பலரும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, கடிதம் அனுப்பும் நிகழ்வினை நடத்தினர், அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய நிலையில் வன்னியர்கள் வாழ்ந்து வருகின்றனர், 1987 ஆம் ஆண்டு ராமதாஸ் தலைமையில் நடைபெற்ற சமூக நீதி போராட்டத்தில், 21 உயிர்களை தியாகம் செய்து, லட்சக்கணக்கானோர் சிறைக்கு சென்று, அதன் பிறகு எம்பிசி பட்டியலில், 20% இட ஒதுக்கீடு பெறப்பட்டது, இதில் உயிர் தியாகம் செய்தவர்கள் அனைவரும் வன்னியர்கள், ஆனால் இந்த 20 % இட ஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 3 முதல் 4 சதவீதம் மட்டுமே கிடைக்கிறது.

அதைத்தொடர்ந்து 2020-21 ஆம் ஆண்டில் மீண்டும் போராடி, வன்னியர்களுக்கென 10.5% உள் ஒதுக்கீடு பெறப்பட்டது, வன்னியர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்க எந்த தடையும் இல்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேற்கண்ட தீர்ப்பு வழங்கி ஓராண்டுக்கு மேலாகியும், வன்னியர்களுக்கான உரிமை வழங்கப்படவில்லை. எனவே 2023- 2024-ம் கல்வி ஆண்டிலாவது, வன்னியர்களுக்கு நியாயமான 10.5% முழு ஒதுக்கீடு கிடைக்க, சமூக நீதியை நிலைநாட்ட, தமிழக அரசு மே 31ஆம் தேதிக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதம் அனுப்பும் நிகழ்வில், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்ட மன்றத் தலைவர் ஜி.கே. மணியுடன், அக்கட்சியின் அரியலூர் மாவட்டச் செயலாளர் மற்றும் ஜெயங்கொண்டம் ஒன்றிய குழுத் தலைவர் ரவிசங்கர், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் உலக சாமிதுரை, அரியலூர் மாவட்டத் தலைவர் சின்னதுரை, மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தன், மாவட்ட வன்னியர் சங்கத் தலைவர் தர்ம பிரகாஷ், மாவட்ட துணைத் தலைவர் பாண்டியன், அரியலூர் நகரச் செயலாளர் விஜயகுமார், வக்கீல் திருமாவளவன், ஒன்றிய கவுன்சிலர் மாலா சாமிநாதன், ஒன்றிய செயலாளர்கள் செம்மலை, பொன் சங்கர்குரு, சக்திவேல், ஜெயங்கொண்டம் நகரச் செயலாளர் பரசுராமன், உட்பட ஏராளமான பாமக மற்றும் வன்னியர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சொத்து வரி வசூலிக்க சென்ற

# பேரூராட்சி அலுவலக ஊழியர்களை மிரட்டிய கம்யூனிஸ்ட், மாதர் சங்க பெண் சிறையில் அடைப்பு

திருவள்ளூர், ஏப். 30 –

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சியில் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் 100 சதவீத சொத்து வரியை வசூலிக்க வேண்டும் என்று திருவள்ளூர் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் உத்தரவிட்டிருந்தார்.



இந்நிலையில், ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் கலாதரன் தலைமையில் ஊழியர்கள் பல்வேறு பிரிவுகளாக வீடு, வீடாக சென்று சொத்து வரி வசூலிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர். சொத்து வரியை வசூலிக்க ஊழியர்களும், பணியாளர்களும் ஒவ்வொரு வீட்டு உரிமையாளரிடமும் பலமுறை சென்று வரியை கேட்டு வசூலித்து வந்தனர்.

கடந்த 19-ம் தேதி ஆரணி அத்திக்குளம் பகுதியில் வசித்து வரும் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மாதர் சங்கத்தை சேர்ந்தவரும், ஆரணி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் மேலாண்மை குழு தலைவராகவும் பதவி வகித்து வரும் நாகலட்சுமி (வயது 37) என்பவர் வீட்டில் ரூ.500 சொத்து வரி செலுத்துமாறு பேரூராட்சி அலுவலக ஊழியர்களும், பணியாளர்களும் கேட்டனர். அவர்களிடம் நாகலட்சுமி பேரூராட்சி சார்பாக என்ன வசதியை இப்பகுதிக்கு செய்து விட்டீர்கள்! வீட்டு வரி வசூலிக்க வந்து விட்டீர்கள் என்று தகாத வார்த்தைகளால் திட்டி பேரூராட்சி பணியாளர்களை அரசு பணி செய்யவிடாமல் தடுத்து மிரட்டல் விடுத்தார்.

இந்தச் சம்பவம் குறித்து பேரூராட்சி செயல் அலுவலர் கலாதரன் நாகலட்சுமி மீது ஆரணி காவல் நிலையத்தில் புகார் செய்தார். புகார் மனு மீது நேற்று முன் தினம் ஆரணி காவல் நிலைய போலீசார் விசாரணை செய்து நாகலட்சுமியை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். பின்னர் அவர் மீது மூன்று பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தனர். ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஜெயந்தி, மகளிர் காவலர் சுமித்ரா ஆகியோர் தலைமையில் போலீசார் நாகலட்சுமியை பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்து புழல் சிறையில் அடைத்தனர்.

# கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு





ஊத்துக்கோட்டை, ஏப். 30 –

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கீழ்முதலம்பேடு ஊராட்சி, கவரைப்பேட்டை பஸ் நிறுத்தம் மற்றும் புதுவாயல், புதுகும்மிடிப்பூண்டி பஸ் நிறுத்தம் ஆகிய மூன்று இடங்களில் கோடை வெயிலின் தாகத்தை போக்க பொதுமக்களுக்கு நீர், மோர், தர்பூசணி உள்ளிட்டவை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வி.ஆனந்தகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரி முன்னிலை வகித்தார். இதில், சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிபூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு தண்ணீர் பந்தல்களை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர், மோர், தர்பூசணி, இளநீர், குளிர்பானங்கள் உள்ளிட்டவைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் பகலவன், மாவட்ட கவுன்சிலர் ராமஜெயம், ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன், நிர்வாகிகள் பா.சே. குணசேகர், கீழ்முதலம்பேடு நமச்சிவாயம், நெல்வாய் மூர்த்தி, கவரப்பேட்டை திருமலை, புலியூர் புருஷோத்தமன், மங்கலம் சுரேஷ், ஒன்றிய கவுன்சிலர் ஜோதி, அரப்பு பாபு, ஸ்ரீ அம்மன் எலக்ட்ரிகல்ஸ் பிரபாகரன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வி.ஆனந்தகுமார் செய்திருந்தார்.

# காரைக்காலில் இயற்கை வழி வேளாண்மை திருவிழா



காரைக்கால், ஏப். 30 –

காரைக்கால் இயற்கை வழி உழவர்கள் மற்றும் ரோட்டேரி சங்கம் காரைக்கால், பஜன்கோவா வேளாண் கல்லூரி, ஓஎன்ஜிசி ஆகியன இணைந்து இந்த இயற்கை வேளாண்மை திருவிழா நடைபெறுகிறது.

இந்நிகழ்வினை சட்டப்பேரவைத் தலைவர் செல்வம் துவக்கி வைத்தார். விவசாயிகளின் படைப்புகளை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பாரம்பரிய நாட்டு காய்கறிகளின் கண்காட்சி மற்றும் பாரம்பரிய காய்கறிகள், பாரம்பரிய அரிசி வகைகள், பாரம்பரிய எண்ணெய் போன்றவை விற்பனைக்கு தனியாகவும் வைக்கப்பட்டிருந்தன. 500 க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இயற்கை சார்ந்த அங்காடிகளும் கண்காட்சியில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாஜீம், சிவா, நாகதியாகராஜன், பஜன்கோ கல்லூரி டீன் புஷ்பராஜ், கூடுதல் வேளான் இயக்குநர் செந்தில்குமார் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகளான குணபாலன் கலியபெருமாள் மற்றும் ஓஎன்ஜிசி யின் அனுராத்தாகூர் மற்றும் இயற்கைவிவசாயிகளான முத்துகிருஷ்ணன், பாஸ்கர் மற்றும் காரைக்கால் மற்றும் அருகேயுள்ள மாவட்ட இயற்கை விவசாய பெருமக்கள் ஆகியோர் பங்கேற்றனர்,

நிகழ்ச்சியின் முதற்கட்டமாக குத்துவிளக்கு ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் புஷ்பராஜ், செந்தில்குமார் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் சிவா பேசுகையில், புதுவையில் முதல் முறையாக இத்திருவிழா காரைக்காலில் நடப்பது பாராட்டுக்கு உறியது ஆகும். இது போன்ற இயற்கை உணவு விழிப்புணர்வை பொதுமக்களிடம் கொண்டு செல்லவேண்டும் எனவும், காரைக்காலில் அமைந்துள்ள விவசாய கல்லூரியும் இது போன்ற விழிப்புணர்வில் ஈடுபட வேண்டும் எனவும் சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டார்.

நிறைவில் சபாநாயகர் பேசுகையில், இந்த ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவித்தது இந்தியாவின் பங்கு மகத்தானது என்றும் இதற்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் பங்கு மிகவும் சிறப்பானது என்றும் கூறிய சபாநாயகர், இயற்கை விவசாயத்திற்கு மத்திய அரசு பல்வேறு சலுகைகள் செய்து வருகின்றன எனவும் கூறினார். மேலும் காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக முதல்வர் நல்ல முடிவை எடுப்பார் என்றும் தெரிவித்த சபாநாயகர், விவசாயத்தில் பாஸ்கர் சேகரித்த 500 க்கும் மேற்பட்ட நெல்கள் புதுவையின் பொக்கிஷம் என தெரிவித்தார். இன்று உணவு என்ற பெயரில் நாம் ரசாயனத்தை சாப்பிட்டு வருகிறோம் என்றும் இதனால் பிறக்கும் குழந்தைக்கு கூட சர்க்கரை நோய், இதய நோய் என பல்வேறு நோய்கள் வருகின்றன எனவும் இதற்கு ஒரே தீர்வு நாம் செயற்கை உணவை தவிர்த்து இயற்கை உணவை உட்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். நிகழ்ச்சியின் இறுதியில் காரைக்காலைச் சேர்ந்த இயற்கை விவசாயிகளை சபாநாயகர் சால்வை அணிவித்து பாராட்டினார்.

# “நாங்கள் துணை நிற்கிறோம்:” மல்யுத்த வீராங்கனைகளுக்கு பிரியங்கா காந்தி ஆதரவு



புதுடெல்லி, ஏப். 30

நாங்கள் துணை நிற்கிறோம் என்று டெல்லியில் போராட்டம் நடத்தும் மல்யுத்த வீராங்கனைகளை சந்தித்த பிரியங்கா காந்தி கூறினார்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பு தலைவரும் பாஜக எம்பியுமான பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது மல்யுத்த வீராஙகனைகள் பாலியல் குற்றச்சாட்டு கூறியதுடன், அவர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக விசாரணைக் கமிட்டி அமைக்கப்பட்டு விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், டெல்லி ஜந்தர் மந்தரில் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் மீண்டும் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு பல்வேறு தலைவர்கள் ஆதரவு கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, டெல்லி ஜந்தர் மந்தர் சென்று போராடும் மல்யுத்த வீரர், வீராங்கனைகளை சந்தித்து சிறிது நேரம் பேசினார். அப்போது அவர்களின் போராட்டத்திற்கு துணை நிற்பதாக பிரியங்கா காந்தி கூறி உள்ளார். இதற்கிடையே 7 மல்யுத்த வீராங்கனைகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் பிரிஜ் பூஷன் மீது டெல்லி காவல்துறை வழக்குபதிவு செய்துள்ளது. அவர் மீது டெல்லி கன்னாட் பிளேஸ் காவல் நிலையத்தில் இரண்டு எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது.



# கர்நாடகா தேர்தலில் பாஜகவுக்கு 40 இடங்களே கிடைக்கும் ராகுல் கணிப்பு

# புதுக்கோட்டையில் இன்று அறமனச்செம்மலும் அறுபது கவிஞர்களும்





# இந்திய ஒன்றியத்திலேயே அதிக நீதிமன்றங்கள் ரகுபதி பெருமிதம்


சென்னை / புதுக்கோட்டை | 30.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தாதாசாகெப் பால்கே, இந்திய இயக்குநர், தயாரிப்பாளர் (பி.1870) (இ.1944)



ஜக்தேவ் சிங் ஜசோவால், பஞ்சாப் எழுத்தாளர், இலக்கியவாதி (பி.1935) (இ.2014)



மாலினி பொன்சேகா, இலங்கை அரசியல்வாதி, நடிகை (பி.1947)



ஹரிணி, தென்னிந்தியத் திரைப்பட பின்னணிப் பாடகி (பி.1979)



## இன்றைய நினைவு நாள்

கா. சு. பிள்ளை, தமிழகத் தமிழறிஞர், சைவசித்தாந்த, சட்ட அறிஞர், உரையாசிரியர் (பி.1888) (இ.1945)



நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், தமிழக நாதசுவரக் கலைஞர் (பி.1924) (இ.2001)



தோர்ச்சீ காண்டு, அருணாச்சலப் பிரதேசத்தின் 6வது முதலமைச்சர் (பி.1955) (இ.2011)



## மாவீரர் நாள் (பாக்கிஸ்தான்)